மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. மாறாக வசூலிக்கக் கூடாது என்று கடுமையாக உத்திரவிடப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட தாலுக்காக்களுக்கும் மாவட்டங்களுக்கும் நிவாரணம் அளிப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் அதைப்போல வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளைக் காப்பாற்ற இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வர அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார். (சிரிப்பு).

பேருந்து வசதி இல்லாத கிராமங்களுக்குப் பேருந்து வசதி

*திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தற்போது பேருந்து வசதி இல்லாத ஆயிரத்துக்கு (1000) மேற்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, சாலை வசதி, பயணிகளின் எண்ணிக்கை, ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கிராமங்களிலுள்ள மக்கட் தொகையை கருத்தில் கொள்ளாமல் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

9.40 மணி

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1000 மக்களும் அதற்குக் கீழும் வசிக்கக் கூடிய பகுதிகளுக்கு, கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்றுள்ள இந்தக் கேள்விக்கு சாலை வசதியும் மக்கள் தொகையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு பேருந்து வசதி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் இங்கே கூறி இருக்கிறார்

1990 சனவரி 23]

கள். நான் கேட்பது ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள், அதற்கு மேலும் சில இடங்களில் வசிக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் பொன்னாபுரம், கோம்புப்பட்டி, வத்தக வண்டவலசு போன்ற ஊர்களில் எல்லாம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அங்கேயிருந்து பள்ளிக்குச் செல்லக்கூடிய மாணவர்கள், ஆசிரியர்கள், ஆஸ்பத்திரிக்குச் செல்லக் கூடியவர்கள் அனைவரும் மிகவும் சிரமம் அடைகிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாவாகக் கேளுங்கள்.

திரு. என். பழனிவேல் ; காலம் காலமாக அவர்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஊர்களுக்குப் பேருந்து வசதி உடனடியாக செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலிலே குறிப்பிட்டேன். சாலை வசதி, பயணிகளுடைய எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கிராம மக்களுடைய எண்ணிக்கையை கருத்தில் எடுத்துக் கொள்ளாமல், பொது மக்களுடைய நலன் கருதி வசதிகள் செய்யப்படுவதாகக் குறிப்பிட்டேன். அந்த அடிப்படையில் ஏற்கனவே அரசினுடைய கொள்கைப்படி, 1500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகையுள்ள கிராமங்களுக்கு முதல் கட்டமாக போக்குவரத்து வசதிகள் செய்யப்பட வேண்டும் என்ற இலட்சியத்தில் சென்ற ஆண்டு 30—11—1988 வரை 15 போக்குவரத்துக் கழகங்களையும் சேர்த்து 12,382 பேருந்துகள் ஓடிக் கொண்டு இருந்தன. இந்த ஓர் ஆண்டுக் காலத்தில் 30—11—1989 வரை கிட்டத்தட்ட 13,241 பேருந்துகள் அதாவது ஓராண்டுக் காலத்தில் 837 பேருந்துகள் கூடுதலாக விடப்பட்டு இருக்கின்றன. 30—11—1989 ஆம் தேதிய நிலவரப்படி அன்றாடம் சராசரியாக பேருந்துகளை உபயோகிக்கக்கூடிய மக்கள் தொகை ஒரு நாளைக்கு $1\frac{1}{4}$ கோடி பேர்களாகும். கிட்டத்தட்ட 50 இலட்சம் கிலோ மீட்டர் பேருந்துகள் ஓடிக் கொண்டு இருக்கின்றன. இருந்தாலும் கூட 1500 மக்கள் தொகையும் அதற்கு மேற்கொண்ட கிராமங்கள் என்று பார்க்கும் போது இன்னும் சுமார் 500 கிராமங்களுக்கு நாம் இத்தகைய வசதிகளைச் செய்ததற்குப் பிறகு, அடுத்த கட்டமாக ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட கிராமங்களையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு பேருந்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் ; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பயணிகள் எண்ணிக்கையைக் கருத்தில் எடுத்துக் கொண்டு என்று சொல்கிறார்கள். நான் கேட்கக் கூடிய அந்த ஊர்களுக்கு பஸ்களே போவது கிடையாது. அப்படி இருக்கும் போது

பயணிகள் கணக்கை எப்படி எடுப்பது என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அந்தக் கிராமங்களுக்கு நீங்கள் பஸ் விடுவது என்பது சராசரி கணக்கைப் பார்க்காமல், அவர்களுடைய வசதியை, கஷ்டத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பஸ்களை விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, போக்குவரத்துக் கழகங்கள் லாப நஷ்டத்தை மட்டுமே கணக்கில் கொள்ளாமல், பொது மக்களுடைய வசதியைக் கருத்தில் கொண்டு தான் தற்போது பேருந்துகள் இயக்கிக் கொண்டு வருகின்றன. சுமார் 60 சதவீதம் வழித்தடங்கள் நஷ்டத்திலே இயங்கக் கூடிய வழித்தடங்களாக இருந்தாலும், பொது மக்களுடைய வசதியைக் கருதி, அவை தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. அதே கொள்கை தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கிராமப்புறங்களிலே இடையிடையே விளைநிலங்கள் வருகின்ற காரணத்தால் குடியிருக்கின்ற மக்கள் சிறிது தூரம் தள்ளித் தள்ளி இருக்கிறார்கள். எனவே இந்த 30 கிலோ மீட்டர் டவுன் பஸ் என்று இருப்பதை 40 கிலோ மீட்டர் வரை கொஞ்சம் உயர்த்திக் கொடுத்து விட்டால், அதே பஸ்கள் எல்லாக் கிராமங்களுக்கும் சென்று போகின்ற ஒரு வசதி ஏற்பட்டு விடும். ஏன் என்றால், 2 கிலோ மீட்டர் 3 கிலோ மீட்டரிலே கூட உள்ள எங்கள் ஊர்களுக்கு பஸ்கள் வரமாட்டேன் என்கிறது என்று சொல்லி, கிராமங்களிலே உள்ளவர்கள் எங்களிடம் பெரிய புகாரைச் சொல்கிறார்கள். தயவு செய்து அமைச்சர் அவர்கள் 30 கிலோ மீட்டராக இருப்பதை 40 ஆக நீட்டித்துக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; தலைவர் அவர்களே, ஏற்கனவே 25 கிலோ மீட்டராக இருந்த தூரத்தை 30 கிலோ மீட்டராக மாற்றியதற்குக் காரணம் இது போல 26 கி. மீ. $27\frac{1}{4}$ கி. மீ. இருக்கிறது, ஆகவே இதை 30 கி. மீட்டராக நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை கடந்த காலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு, தற்போது நடைமுறையில் இருக்கிறது. இனி 30 கி. மீட்டராக இருப்பது 35-க்கோ அல்லது 40-க்குப் போனால், அதற்குமேலே $1\frac{1}{4}$ கி.மீட்டர் 2 கி. மீ. வரை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து வரத்தான் செய்யும். இதை அதிகப்படுத்துவதிலே ஒன்றும் அரசுக்கு மறுப்பு இல்லை. ஆனால் டவுன் பஸ்கள் மற்றும் மஃபசல் பஸ்கள் என்று பார்க்கும் போது, கட்டண வித்தியாசங்களிலே பேருந்துகளுக்கான போக்குவரத்துக் கழகங்கள் மேலும் கஷ்டத்தை சந்திக்கக் கூடிய சூழ்நிலைதான் ஏற்படும். இருந்

1990 சனவரி 23]

தாலும் பொதுமக்களுடைய நலன் கருதி இந்தக் கருத்தை எந்த அளவிற்குச் செயல்படுத்த முடியும் என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

9-45 மணி

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே போதிய அளவில் பேருந்துகள் இல்லாத காரணத்தினால் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம் கேட்கின்றபோது பேருந்துகள் இல்லை என்று சொல்கிறார்கள். இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு, கழகம் பேருந்துகளைப் பெறும் வரை தனியாருக்கு டெம்பரரி பர்மிட் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; தலைவர் அவர்களே, தற்போது சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கெங்கு பேருந்துகள் வேண்டுமென்று கோரிக்கைகள் வைத்திருக்கின்றார்களோ, அந்தக் கோரிக்கைகளில் பெரும்பாலான கோரிக்கைகள நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. தொடர்ந்து அத்தகைய கோரிக்கைகள் பல துறைகளிலிருந்து வருகின்ற காரணத்தால் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலேயும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு எந்தெந்த கிராமங்களுக்குத் தேவை என்பதை அறிந்து சாலை வசதிகள் உள்ள அத்தனை கிராமங்களுக்கும் விரைந்து இந்த பஸ் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் சட்டமன்றக் கூட்டம் முடிந்த பிறகு போக்குவரத்துக் கழகம் வாரியாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆலோசனைக் கூட்டம் ஒன்றை அரசின் சார்பில் நடத்தயிருக்கிறோம். அப்போது உறுப்பினர்களுடைய தேவைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே பேருந்தை 4, 5 வழித்தடங்களிலே நாள் தோறும் விடுகின்ற காரணத்தினால் ஒரு கிராமத்திற்கு ஒரு வழித் தடத்திலே செலுத்துகின்ற நேரத்திலே, காலை 5 மணிக்கே இரண்டு முறையும், இரவு நேரங்களிலே 7 மணிக்குப் பிறகு இரண்டு முறையும் செலுத்துகின்ற காரணத்தினால், அந்த கிராமத்திலே இருக்கின்ற மக்கள் பயனடைய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, ஒரே பேருந்தை 4 வழித் தடங்களிலே விடுவதைத் தவிர்த்து, மக்களுடைய குறைகளைத் தீர்க்கின்ற வகையிலே, அவர்கள் அந்தந்த கிராமங்களிலே இருந்து நகரத்திற்கோ அல்லது வேறு எந்த இடத்திற்கோ சென்று பணிகளை ஆற்றுகின்ற வகையிலே ஒரே தடத்திலே விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை அரசு 'Multi pronged Route' என்று அதற்குப் பெயரிட்டிருக்கிறார்கள். சில சிறிய கிராமங்களைப் பேருந்துகளால் இணைக்க வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் தான் ஒரே பேருந்தை நேரங்களை மாற்றி பல கிராமங்களை இணைத்து 2, 3 வழித் தடங்களில் விடக் கூடிய ஒரு நிலைமையை நாம் வைத்திருக்கிறோம். ஒரே தடத்திலே அந்தப் பேருந்து ஓடுமேயானால், அதற்குத் தேவையான பயணிகளும் இருக்க மாட்டார்கள். ஏராளமான நஷ்டத்தையும் நாம் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வழித் தடங்களிலும் அரசுப் பேருந்துகள் ஓடுகின்ற காரணத்தினால் ஏனைய மாவட்டங்களைப் போல் தனியார் பேருந்துகள் ஓடுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகையினால் பல வழித் தடங்களில் சாலைகள் செம்மையாக இருந்தும் போக்குவரத்து வசதி வேண்டி பேருந்துகள் விடுவதற்கு அதிகாரிகளை அணுகியபோது அவர்கள் விடுவதற்கு மறுக்கிறார்கள். காரணம் கேட்டால் போதிய அளவில் பேருந்துகள் இல்லை என்று சொல்லி, அதனை விட்டு விடுகிறார்கள். அதற்கு உடனடியாக ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போன்று நிச்சயமாக இந்தக் குறைகள் எல்லாம் எதிர் காலத்திலே கேட்டு அறியப்பட்டு தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே சத்தியமங்கலம், தெங்குமரகடா போன்ற இடங்களுக்கு இரவு நேரங்களிலே வண்டிகளிலே பயணம் செய்கின்ற மக்கள் அந்த வழியிலே இருக்கின்ற சிற்சில கிராமங்களுக்குச் சென்று வந்தால் பயனாக இருக்கும். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு மேட்டுப்பாளையம்—தெங்குமரகடா செல்கின்ற வழியில் குன்னூர், கல்லம்பாளையத்தைச் சேர்ந்த ஒருவர் யானையால் இரவு நேரத்தில் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட பல சம்பவங்கள் என்னுடைய தொகுதியிலே இரவு நேரங்களில் நடைபெறுகின்றன. அதைப் போக்க அந்த வழித் தடங்களில் இரவு நேரங்களிலே, சாலை வசதிகள் இருக்கின்ற ஊர்களுக்கு, பேருந்துகள் சென்று வர ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 சனவரி 23]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இந்தக் குறைகளைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிவிப்பார்களேயானால், நடவடிக்கைகள் மேற்கொள்ள வசதியாக இருக்கும்.

9-50 மணி.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கார்ப்பொரேஷன் பேருந்துகளில் பத்திரிகையாளர்களுக்கு இனாமாக பாஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால் தந்தை பெரியார் கார்ப்பரேஷனில் பத்திரிலகயாளர்களுக்கு ஃப்ரீ பாஸ் கொடுக்க மறுத்து, கொடுக்கக் கூடாது என்ற நிலை இருக்கிறதே, அதைக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன் தினம்தான் இது என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஏற்கெனவே பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்ட பஸ் பாஸ்களை இந்த ஆண்டு புதுப்பித்துத் தருவதற்கு அதிகாரிகள் மறுக்கிறார்கள் என்ற தகவல் நேற்று முன் தினம் காலை என்னிடத்திலே தெரிவிக்கப்பட்டதற்குப் பிறகு உடனடியாக மீண்டும் புதுப்பித்து வழங்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்திரவு இடப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துக் கழகங்களில் ஏற்படுகிற குறைபாடுகளை ஆராயவும், மக்களுக்குச் செய்ய வேண்டிய வசதிகளுக்கும் முன்பு அட்வைசரி பாடி என்ற வகையில் ஒரு குழு இருந்தது. ஆலோசனைக் குழு என்று மக்கள் பிரதிநிதிகளால் அமைக்கப்பட்ட குழு இருந்த காரணத்தால், மாவட்டங்களில் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களிலுள்ள பிரிவுகளில் அது சிறப்பாக பணி ஆற்றியது. அந்த முறையில் இந்த அரசு மக்கள் ஆலோசனைக் குழு என்ற ஒரு குழுவை ஏற்படுத்துவதற்கு ஏதாவது செயற் குறிப்பு வைத்திருக்கிறதா? அப்படி என்றால், அதை நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

டி2 53-370—4